## நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2014

நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2007 யூலை 17 ஆந் திகதிய நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது.

அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நீதி உட்கட்டமைப்பு பேணுகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை**

பதிற்கடமை அடிப்படையில் நிதியத்தின் பணிகளில் ஈடுபட்ட இரண்டு உத்தியோகத்தர்களிற்கு ரூபா 97,187 பதிற்கடமை படி செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்களிற்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் மற்றும் கடமைப் பட்டியல்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவு | ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 3.2 (ஆ) பந்தி | நிதியத்தின் மிகைகள் உடனடியாக திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.1 (அ) மற்றும் (இ) பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பாதீடின்றி ரூபா 15,083,768 தொகை மீளாய்வாண்டில் மூலதனச் செலவினமாக ஏற்பட்டிருந்தது. |

**3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 25,904,494 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 7,869,167 பற்றாக்குறையினை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 18,035,327 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. அரசாங்க மானியங்கள் ரூபா 2,000,000 ஆல் அதிகரித்தும் உட்கட்டமைப்பு பராமரிப்புச் செலவினம் ரூபா 16,923,327 ஆல் குறைந்தும் இருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**நிதிச் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த ஏனைய தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் உட்கட்டமைப்பு பராமரிப்புச் செலவினம் ரூபா 14,782,999 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2014 | 2013 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| களுத்துறை உயர் நீதிமன்ற வலயம் | 4,555,740 | 9,274,098 | 14,129,710 |
| அம்பாந்தோட்டை / மாத்தறை உயர் நீதிமன்ற வலயம் | 29,987 | 4,755,435 | 8,139,431 |
| சிலாபம் / புத்தளம் உயர் நீதிமன்ற வலயம் | - | 1,252,309 | 3,876,077 |
| நீதிமன்ற முன்னேற்ற நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அலுவலகம் | - | - | 209,081 |
| கொழும்பு உயர் நீதிமன்ற வலயம் | - | 3,625,827 | 11,349,034 |
| குருணாகல் உயர் நீதிமன்ற வலயம் | - | 7,677,832 | 9,507,787 |
| கேகாலை உயர் நீதிமன்ற வலயம் | - | 1,522,900 | 3,915,392 |
| காலி உயர் நீதிமன்ற வலயம் | 3,339,504 | 1,050,000 | 4,453,201 |
| அவிஸ்ஸாவெல்லை உயர் நீதிமன்ற வலயம் | 968,000 | - | 1,340,598 |
| அநுராதபுரம் உயர் நீதிமன்ற வலயம் | 2,254,172 | - | 3,014,172 |
| யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற வலயம் | - | 406,000 | 406,000 |

| | | | |
|---|---|---|---|
| கம்பஹா உயர் நீதிமன்ற வலயம் | - | 1,610,110 | 10,395,810 |
| மொனராகலை வலயம் | 1,593,900 | - | 1,593,900 |
| பொலன்னறுவை வலயம் | 1,558,649 | - | 1,558,649 |
| நீதிச் சேவைகள் ஆணைக்குழு வலைப்பின்னல் செயற்திட்டம் | 483,047 | 531,816 | 1,014,863 |
| மொத்தம் | 14,782,999 | 31,706,327 | 74,903,705 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உயர் நீதிமன்றங்களுக்கு நிதிகளை விடுவிப்பதும் நீதி மன்றங்களின் பராமரிப்புக் கிரயத்தை மேற்கொள்வதும் மாத்திரமே நிதியத்தின் செயற்பாடாக உள்ளது. அதற்கமைய, 2009 முதல் 2014 வரையான காலப்பகுதியில் நீதிமன்ற வலயங்களிற்கு ரூபா 74,903,705 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. நீதிமன்ற வலயங்களினால் தொடர்புடைய கொள்வனவுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதியத்தினால் இக் காலப்பகுதியில் ரூபா 1,290,329 மேந்தலைச் செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதேநேரம், நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் உட்கட்டமைப்பு பிரிவு அதன் பிரதான தொழிற்பாடாக இதனையொத்த செயற்பாடுகளிற்காக ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ ரூபா 800 மில்லியன் வீதம் செலவிட்டிருந்தது. ஆகையால், நிதியத்தின் தனிப்பட்ட தொழிற்பாடொன்றாக ஒத்த செயற்பாடுகளிற்கு நிதிகளை பயன்படுத்துதல் கணக்காய்வில் கேள்விக்குரியாக உள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிதியத்திற்கென கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2009 இலிருந்து 2014 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகள் தொடர்பில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2009 ஆம் ஆண்டிலிருந்தும் மீளாண்டிற்காகவும் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நிதியம் நிறுவப்பட்டது முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கலந்துரையாடலுக்காக மாற்றுவழி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) பாதீடு